**செ.கு.எண் : 14** **நாள் : 31.01.2022**

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்களின் அறிக்கை

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள நியாய விலைக் கடை முடிச்சூர் கிராமம்-2 (02PD129SK) 25.01.2022 இரவு சட்டவிரோதமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பொது விநியோகத் திட்ட அரிசியை வேன் மூலம் கடத்த முயன்றபோது, குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகளால் திருமதி ஏ.கோமதி, விற்பனையாளர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். கடத்தப்படவிருந்த ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டு, முதல் தகவல் அறிக்கை எண்.21/2022 பதியப்பட்டது. இதனை அடுத்து திருமதி ஏ.கோமதி, விற்பனையாளர், பண்டகசாலை நிர்வாகத்தால் உடன் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள், கட்டுநர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு, தகுதியான அளவில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை முறையாக விநியோகம் செய்ய கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரிசி கடத்தல் போன்ற முறைகேடுகளில் ஈடுபடும் நியாய விலைக் கடைப் பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், குற்ற வழக்கு தொடரப்பட்டு, தொடர்புடைய பணியாளர்களை பணிநீக்கம் செய்யப்படுவர் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**